செ. கு. எண்: 63 நாள்: 1.3.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 1.3.2013**

ரயில்வே நிதிநிலை அறிக்கையின் மூலமும், பொது நிதிநிலை அறிக்கையின் மூலமும் மக்களை பெரும் இன்னல்களுக்கு ஆளாக்கியுள்ள தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு, இன்று (1.3.2013) நள்ளிரவு முதல் பெட்ரோல் விலையை லிட்டருக்கு 1 ரூபாய் 40 காசுகள் என்ற அளவிற்கு உயர்த்தியிருப்பது "எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?" என்ற பழமொழியைத் தான் நினைவுபடுத்துகிறது.

பெட்ரோல் விலையை லிட்டருக்கு 1 ரூபாய் 50 காசுகள் என்ற அளவிற்கும், டீசல் விலையை லிட்டருக்கு 45 காசுகள் என்ற அளவிற்கும் உயர்த்தி இரண்டு வாரங்கள் கூட முடிவடையாத சூழ்நிலையில், மீண்டும் சர்வதேச சந்தை விலையையும், இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளதையும் சுட்டிக்காட்டி, மீண்டும் பெட்ரோல் விலையை லிட்டருக்கு 1 ரூபாய் 40 காசுகள் என்ற அளவிற்கு உயர்த்தியிருப்பது மிகுந்த வேதனைக்குரியது. இதற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதைய பெட்ரோலிய விலை உயர்வைச் சுட்டிக்காட்டி, வாகன உரிமையாளர்கள் வாகனக் கட்டணங்களை உயர்த்தக் கூடும் நிலை நிச்சயம் உருவாகும். இதன் விளைவாக, அனைத்துப் பொருட்களின் விலையும் மேலும் பன்மடங்கு உயரக் கூடும். இதன் தொடர்ச்சியாக, நாட்டு மக்கள் மீண்டும் ஒரு நெருக்கடியான நிலைமைக்கு, தாங்கொண்ணா துயரத்திற்கு ஆளாக்கப்படுவார்கள்.

மொத்தத்தில் பெட்ரோலியப் பொருட்களின் விலையை அடிக்கடி உயர்த்துவது ஏழை, எளிய மக்களை பாதிக்கும் செயல். மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை மற்றும் விலை நிர்ணயக் கொள்கை நாட்டின் பொருளாதாரத்தை சீரழிக்க வழிவகுக்குமே தவிர, மேம்படுத்த வழிவகுக்காது.

இந்திய ரூபாயின் மதிப்பு என்பது நடப்புக் கணக்கு பற்றாக்குறை மற்றும் அந்நிய நேரடி முதலீடு, அந்நிய நிறுவனங்கள் முதலீடு ஆகியவற்றின் அடிப்படையிலும், நாட்டின் பொருளாதார நிலைத் தன்மை குறித்த பார்வையின் அடிப்படையிலும் அமையக் கூடியது. எனவே, அவ்வப்போது மாறும் ரூபாய் மதிப்பின் அடிப்படையில் பெட்ரோலியப் பொருட்களின் விலையை அடிக்கடி மாற்றி அமைப்பது என்பது பொருளாதார நிலைத் தன்மைக்கு ஊறுவிளைவிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, நான் ஏற்கெனவே பல முறை கூறியுள்ளபடி, பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணயக் கொள்கையில் உடனடி மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

எனவே, ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலன் கருதி இந்த பெட்ரோல் விலை உயர்வை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, பெட்ரோல் மற்றும் டீசல் விலையை எண்ணெய் நிறுவனங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற முடிவினையும் மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று பொதுமக்களின் சார்பாக தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

"மக்களை கொடுமைப்படுத்துவது வாடிக்கை'' என்ற முறையில் இது போன்று இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பெட்ரோல் மற்றும் டீசல் விலையை உயர்த்தி மக்களைக் கொடுமைப்படுத்தினால், கொடுமை தாங்க முடியாமல் மக்கள் சிந்தும் கண்ணீர் மத்திய ஆட்சியையே அழிக்கும் ஆயுதமாகிவிடும் என்பதை மத்திய அரசுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**